செ.வெ.எண்:71 நாள்:31.10.2018

## நாகப்பட்டினம் மாவட்டம்

## நாகப்பட்டினம் மாவட்டத்தில், 2018-19-ஆம் ஆண்டிற்கான ஊரக புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்கலாம்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

கிராமப் பெண்களின் பொருளாதாரம் மேம்பட கால்நடை பராமரிப்புத்துறை மூலம் ஊரக புறக்கடை கோழி வளர்ப்புத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் ஊரகப்பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள், வேலைவாய்ப்புடன் நிரந்தர கூடுதல் வருமானம் பெறமுடியும். இதனில் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்கு கால்நடை உதவி மருத்துவர் மூலம் 1 நாள் பயிற்சி அளித்து நான்கு வார வயதுடைய 50 நாட்டுக் கோழிகள் 1-க்கு ரூ.75 வீதம் ரூ.3750-க்கு 100 சதவீதம் இலவசமாக வழங்கப்படும். மேலும், கோழிகளுக்கான இரவு தங்கும் கூண்டு அமைத்திட பயனாளிகளுக்கு ரூ.2500 அளிக்கப்படும். கால்நடை பராமரிப்புத்துறை மூலம் வழங்கப்படும் அளவிற்கு ஏற்ப கூண்டு தயாரித்து புகைப்படம் மற்றும் செலவின வவுச்சர் பெற்றுக் கொண்டு பயனாளியின் வங்கிகணக்கிற்கு பணம் அனுப்பப்படும். கால்நடை பராமரிப்புத்துறை மூலம் குடற்புழு நீக்கம் மற்றும் தடுப்பூசிகள் அளிக்கப்பட்டு, கோழிகள் தொடர்ந்து பராமரித்திட உதவி செய்யப்படும்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில், ஒரு ஒன்றியத்திற்கு 200 மகளிர் வீதம் 11 ஒன்றியங்களுக்கும். 2200 அலகுகள் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 30 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படும். பயனாளிகள் தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதார திட்டத்தின் மூலம் பெண்களுக்கு வழங்கப்பட்ட ஏழைகளின் பங்கு அடையாள எண் வைத்திருப்பவரும், கிராமத்தில் நிரந்தரமாக வசிப்பவராகவும், விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் மற்றும் கோழிவளர்ப்பு திட்டத்தில் பயனடையாதவராகவும் இருக்க வேண்டும். விதவை, ஆதரவற்றவர்கள், மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள தகுதியுடைய பெண் பயனாளிகள் அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தை அணுகி விண்ணப்பிக்கலாம் என நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவா் முனைவா்.சீ.சுரேஷ்குமாா். இ.ஆ.ப.. அவா்கள் தெரிவித்துள்ளாா்கள்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**